7100

Register Number | | | | | |

**Part III**

# அரசியல் அறிவியல் / POLITICAL SCIENCE

( Tamil Version )

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 200

## பகுதி - அ

குறிப்பு : i) **அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக.

ii) அனைத்து வினாக்களுக்கும் சமமான மதிப்பெண்கள். 20 × 1 = 20

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுதவும் :

1. பின்வருவனவற்றில் எது மனித சமுதாயத்தின் வாழ்விற்கும், வசதிக்கும் ஏற்படுத்தப்பட்ட இன்றியமையாத அமைப்பு ?

அ) குடும்பம் ஆ) சமுதாயம்

இ) தொழிற்சங்கங்கள் ஈ) அரசு.

2. கிரேக்க நகர அரசுகள் தோன்றிய காலமாகக் கருதப்படுவது எது ?

அ) கி.மு. 1000 ஆ) கி.மு. 500

இ) கி.பி. 1000 ஈ) கி.பி. 337.

3. இவர்களில் யார் சமுதாய ஒப்பந்தக் கோட்பாட்டின் ஆதரவாளர் ?

அ) மார்கன் ஆ) மாக்லனன்

இ) ஒப்பன்ஹீம் ஈ) ரூஸோ.

[ Turn over

4. அரசர்களாவதற்கு போர்கள் உதவுகின்றன என்னும் கொள்கை எது ?

அ) தந்தை வழிக் கொள்கை ஆ) தாய் வழிக் கொள்கை

இ) வரலாற்றுக் கொள்கை ஈ) வலிமைக் கொள்கை.

5. வருமான வரி செலுத்துதல் என்பது எதைக் குறிக்கின்றது ?

அ) பாரம்பரிய ஆளுமை ஆ) பகுத்தறிவு - சட்ட ஆளுமை

இ) தலைமைப் பண்பு ஆளுமை ஈ) இவை அனைத்தும்.

6. உயர்குடிக் கோட்பாட்டை விளக்கியவர் இவர்களில் யார் ?

அ) கார்ல் மார்க்ஸ் ஆ) மாக்ஸ் வீபர்

இ) பிளேட்டோ ஈ) பரிட்டோ.

7. A.V. டைசியின் கருத்துப்படி இறைமைக்கு எத்தனை விதமான எல்லைத் தடைகள் உள்ளன ?

அ) இரண்டு ஆ) மூன்று

இ) ஐந்து ஈ) ஆறு.

8. பின்வருவனவற்றில் எது பிரெட்டன் வுட்ஸ் அமைப்பு இல்லை ?

அ) உலக வங்கி ஆ) பன்னாட்டு நிதிக்கழக மானிய நிதி

இ) உலக வியாபார அமைப்பு ஈ) பன்னாட்டு தேசியக் கழகங்கள்.

9. கூட்டாட்சி என்ற சொல் தோன்றுவதற்கு ஆதாரமாக இருந்த போடஸ் என்பது எந்த மொழிச் சொல் ?

அ) இலத்தீன் ஆ) கிரேக்கம்

இ) பிரெஞ்சு ஈ) சமஸ்கிருதம்.

10. எந்த நாட்டில் தலைவர் முறை அரசாங்கம் செயல்படுகிறது ?

அ) இந்தியா ஆ) இங்கிலாந்து

இ) U.S.A. ஈ) சுவிட்சர்லாந்து.

11. மாண்டெஸ்க்யூ எந்த நூலில் அதிகாரப் பிரிவினைக் கொள்கையை விளக்கியுள்ளார் ?

அ) சட்டங்களின் உயிர் ஆ) லெவியாதன்

இ) சிவில் அரசாங்கம் ஈ) சமுதாய ஒப்பந்தம்.

12. கீழ்க்கண்ட நாடுகளில் எந்த நாடு நீதி மறுஆய்வுக் கொள்கையைப் பின்பற்றுகிறது ?

அ) U.S.A ஆ) கனடா

இ) இந்தியா ஈ) இவையனைத்தும்.

13. இந்திய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்த ஆண்டு

அ) 26 ஜனவரி, 1950 ஆ) 15 ஆகஸ்ட், 1947

இ) 26 ஜனவரி, 1947 ஈ) 15 ஆகஸ்ட், 1945.

14. பண மசோதவை மாநிலங்கள் அவை எவ்வளவு காலம் தாமதப்படுத்தலாம் ?

அ) இரண்டு மாதங்கள் ஆ) ஆறு வாரங்கள்

இ) 30 நாட்கள் ஈ) 14 நாட்கள்.

15. இந்தியப் பொதுவுடைமைக் கட்சி எந்த ஆண்டு பிளவுபட்டது ?

அ) 1924 ஆ) 1942

இ) 1943 ஈ) 1964.

16. இந்தியாவில் மாநில ஆளுநராவதற்கான வயதுத் தகுதி எது ?

அ) 21 வயது　　ஆ) 25 வயது

இ) 30 வயது　　ஈ) 35 வயது.

17. மாநில சட்டசபைக் கலைப்பு இந்திய அரசியல் அமைப்பின் எந்த விதியின்படி மேற்கொள்ளப்படுகிறது ?

அ) விதி 170　　ஆ) விதி 171

இ) விதி 352　　ஈ) விதி 356.

18. மாவட்ட அளவில் பலதரப்பட்ட பணிபுரியும் பணியாளராக இருப்பவர் யார் ?

அ) மாவட்ட சுகாதார அலுவலர்　　ஆ) மாவட்ட தொழிலாளர் அலுவலர்

இ) தாசில்தார்　　ஈ) மாவட்ட ஆட்சியாளர்.

19. பின்வருவனவற்றில் எந்த வரி மாநகராட்சியால் வசூலிக்கப்படுவதில்லை ?

அ) கேளிக்கை வரி　　ஆ) வாகன வரி

இ) நிலவரி　　ஈ) வருமான வரி.

20. இந்தியப் பொருளாதார முன்னேற்றத்தின் முதுகெலும்பாகத் திகழ்வது எது ?

அ) விவசாயம்　　ஆ) தொழில்துறை

II. கோடிட்ட இடத்தை பூர்த்தி செய்க : 10 × 1 = 10

21. நவீன அரசு ...................... அரசாகும்.

22. அரசர்கள் ...................... பிரதிநிதியாகக் கருதப்படுகிறார்கள்.

23. குடும்பத்தின் விரிவாக்கமே ...................... என்பது தந்தை வழிக்கோட்பாடு.

24. ஆளுமை என்பது ...................... அதிகாரமாகும்.

25. அதிகாரப் பங்கீடு ...................... அரசாங்கத்தின் முக்கிய அம்சமாகும்.

26. எழுதப்பட்ட அரசியலமைப்பின் ...................... ஆக நீதித்துறை கருதப்படுகிறது.

27. இந்தியக் குடியரசுத்தலைவர் இந்தியாவின் ...................... குடிமகன் ஆவார்.

28. மாநில ஆளுநரின் முன்பரிந்துரையைப் பெற்ற பின்னரே மாநில சட்டமன்றத்தில் ...................... மசோதாக்கள் அறிமுகப்படுத்த முடியும்.

29. பஞ்சாயத்து இராஜ்ஜிய முறையின் மகாசாசனம் என்று ...................... அறிக்கை புகழாரம் சூட்டப்பட்டுள்ளது.

30. இந்திய அரசியலமைப்பு ...................... ல் நடைமுறைக்கு வந்தது.

III. கீழ்வருவன *சரியா* அல்லது *தவறா* என எழுதுக : 10 × 1 = 10

31. முதன்முதலில் இங்கிலாந்து நாட்டில்தான் மக்கள் நல அரசின் சிந்தனை ஆழ்ந்து வேரூன்றியது.

32. கிரேக்க நகர அரசுகள் அதிக மக்கள்தொகை கொண்டவைகளாக இருந்தன.

33. தெய்வீகத் தோற்றக் கொள்கை ஒரு நவீனக் கொள்கையாகும்.

35. நீதி மறுஆய்வுக் கொள்கை அதிகாரப் பிரிவினைக் கொள்கைக்கு எதிரானது.

36. நீதிபதிகள் நிர்வாகத்தால் நியமிக்கப்படும் முறை சிறந்த முறையாகும்.

37. மக்களவை கலைப்பிற்கு உள்ளாவது இல்லை.

38. தமிழ்நாட்டில் உயர்நீதி மன்ற நீதிபதிகள் 65 வயதில் ஓய்வு பெறுகின்றனர்.

39. தலைமைச் செயலர் மாநில செயலகத்தின் செயல்துறைத் தலைவராக உள்ளார்.

40. பஞ்சாயத்து இராஜ்ஜிய முழுக் கட்டுமானத்தின் அடித்தளமாக கிராம சபை உள்ளது.

IV. கீழ்வருவனவற்றைப் பொருத்துக : $10 \times 1 = 10$

| | |
|---|---|
| 41. மேலாண்மை இயலின் குரு | a) இங்கிலாந்து |
| 42. புதிய அரசியல் அறிவியல் | b) மையப்படுத்தும் சக்தி |
| 43. தொழிற் புரட்சி | c) 1950 |
| 44. செய்தித் தொடர்பு புரட்சி | d) 1992 |
| 45. குழுமுறை அரசாங்கம் | e) பரவலாக்கும் சக்தி |
| 46. பாராளுமன்ற முறை | f) சுவிட்சர்லாந்து |
| 47. 73 - வது திருத்தச் சட்டம் | g) 1991 |
| 48. புதிய தொழிற்கொள்கை | h) ஹீன்ஸ் யூலா |
| 49. 44 - வது திருத்தச் சட்டம் | i) பீட்டர் டிரக்கர் |

## பகுதி - ஆ

குறிப்பு : i) எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளி.

ii) எல்லா வினாக்களுக்கும் சமமான மதிப்பெண்கள்.

iii) ஒவ்வொரு வினாவிற்கும் 50 சொற்களுக்கு மிகாமல் விடை எழுதுக.

10 × 3 = 30

51. முக்கிய அரசு வகைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

52. தெய்வீக தோற்றக் கோட்பாட்டின் சிறப்புகள் யாவை ?

53. அரசியல் அறிஞர்கள் படிக்க விரும்பும் சில சமூக நிறுவனங்களின் பெயர்களை எழுதுக.

54. அதிகாரம் மற்றும் ஆளுமை ஆகியவற்றை விளக்குக.

55. மக்களாட்சி மற்றும் உயர்குடியினர் கோட்பாடுகளுக்கிடையிலான அடிப்படை முரண்பாடுகள் யாவை ?

56. பன்னாட்டு நிதிக்கழகம் மற்றும் உலக வங்கியின் திட்டங்கள் சிலவற்றைக் கூறுக.

57. இறைமையின் இரு பிரிவுகள் யாவை ? விளக்குக.

58. ஒற்றையாட்சி என்பதன் பொருள் தருக.

59. தற்கால சர்வாதிகார ஆட்சியின் இயல்புகள் யாவை ?

60. நீதி மறுஆய்வு என்றால் என்ன ?

61. நாடாளுமன்றக் கூட்டத் தொடர் பற்றி சிறு குறிப்பு எழுதுக.

62. கிராம நிர்வாக அலுவலர் பற்றிக் குறிப்பு எழுதுக.

63. உள்ளாட்சி அரசாங்கத்தின் சிறப்பம்சங்கள் யாவை ?

64. மக்கள்தொகை அடர்த்தி அதிகமுள்ள இந்திய நகரங்கள் யாவை ?

65. நிர்வாக சீர்திருத்த ஆணையம் ( 1966-70 ) பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

## பகுதி - இ

குறிப்பு : i) எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்க.

ii) எல்லா வினாக்களுக்கும் சமமான மதிப்பெண்கள்.

iii) ஒவ்வொரு வினாவிற்கும் ஒரு பக்க அளவில் விடையளி. 6 × 10 = 60

68. புதிய அரசியல் அறிவியலின் குணாதிசயங்கள் யாவை ?

69. ஓரவை மற்றும் ஈரவை முறைகளுக்கிடையேயான வேறுபாடுகளைப் பட்டியலிடுக.

70. நீதித் துறை சுதந்திரத்தை நிலைநாட்டும் காரணிகளைச் சுருக்கமாக விளக்குக.

71. உச்ச நீதிமன்றத்தின் நீதிப்பேராணை அதிகார வரம்பினை விவரிக்க.

72. மாவட்ட ஆட்சியாளரின் பணிகளில் ஏதேனும் பத்தினை எழுதுக.

73. பஞ்சாயத்து சமிதியின் சமூக வளர்ச்சித் திட்டம் சார்ந்த பணிகள் யாவை ?

74. இந்தியாவில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்களை விவரி.

## பகுதி - ஈ

குறிப்பு : i) எல்லா வினாக்களுக்கும் விடையளி.

ii) எல்லா வினாக்களுக்கும் சமமான மதிப்பெண்கள்.

iii) எல்லா வினாக்களுக்கும் இரு பக்க அளவில் விடையளி. $3 \times 20 = 60$

75. மக்கள் நல அரசை நிறுவுவதில் உள்ள சிக்கல்களை விவரி.

அல்லது

அரசின் பரிணாம வளர்ச்சிக்கு ஆதாரமாக இருந்த காரணிகளை விளக்கு.

76. பாராளுமன்ற அரசாங்கமுறை என்றால் என்ன ? அதன் முக்கிய அம்சங்களை விவரி.

அல்லது

இந்தியக் குடியரசுத்தலைவரின் அதிகாரங்களை விவரி.

77. முதலமைச்சரின் அதிகாரங்களையும், பணிகளையும் விவரி.

அல்லது